

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்று 2 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி தருமபுரி அரசு கலைக்கல்லூரி கலையரங்கத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் "ஈடில்லா ஆட்சி,ஈராண்டே சாட்சி என்ற சாதனைமலரை வெளியிட்டு, 807 பயனாளிகளுக்கு ரூ.4.89 கோடி மதிப்பிலான ஓய்வூதிய பலன்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,மாவட்ட வருவாய் அலுவலர் அனிதா,வருவாய் கோட்டாட்சியர் டி.ஆர்.கீதாராணி,நகர்மன்ற தலைவர் மா.லட்சுமி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர்,கைம்பெண் நலவாரிய உறுப்பினர் மாவட்ட துணை செயலாளர் ரேணுகாதேவி,மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,தடங்கம் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.கவிதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




கரூர் மாநகர வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் வெங்கமேடு அண்ணா சிலை அருகே நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அமைச்சர் வி .செந்தில் பாலாஜி, நாஞ்சில் சம்பத் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வடக்கு நகர செயலாளர் கரூர் கணேசன், மேயர் கவிதா கணேசன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், மாநகர கழகச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், சுப ராஜகோபால், க.அன்பரசன், வெங்கமேடு சக்திவேல், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி விஜயகுமார், உள்ளிட்ட நிர்வாகிகள் அருகில் உள்ளனர்

# நிதி ஆதாரம் அற்ற அறிவிப்புகளை சாதனைகள் என்று சொல்வதா?

## புதுவை அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கண்டனம்!

புதுச்சேரி, மே 9 -

நிதி ஆதாரம் இல்லாமல் முதல்வர் அறிவித்த திட்டங்களை அரசின் சாதனைகளாக கூறுவது புதுச்சேரி மக்களை ஏமாற்றும் வேலை என்று புதுச்சேரி அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

அரசின் சாதனைகள் என்பது அந்த அரசு பொறுப்பேற்ற காலத்தில் இருந்து மக்களுக்கு நிறைவேற்றிய திட்டங்களை குறிப்பிடலாம். அரசின் வெற்று அறிவிப்புகள் எல்லாம் சாதனைகளாகாது. புதுவை அரசின் சாதனைகளாக முன்வைக்கப்பட்டவை வெற்று அறிவிப்புகளே தவிர சாதனைகள் அல்ல.

திட்டமிட்ட வளர்ச்சி என்பதே மாநிலத்தின் எழுச்சியாகும். அந்த வகையில் மகளிருக்கு கட்டணமில்லா பஸ் பயணம், புதுமை பெண் திட்டம், காலை உணவுத் திட்டம், மாணவிகளுக்கு மாதம் ரூ.1000, இளைஞர்களுக்கு 4 லட்சம் வேலை, வெளிநாட்டு முதலீடுகள் ஈர்ப்பு, விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்புகள் என ஏழை, எளிய விளிம்புநிலை மக்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின, பட்டியலின, பழங்குடி மக்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்துத் தரப்பு மக்களின் நலன் காக்கின்ற திட்டங்களை இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு



எந்த அரசும் செய்திடாத சாதனைகளைச் செய்து உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருப்பது திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் எங்கள் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈராண்டுச் சாதனையாக பட்டியலிட்டுள்ளார். அதனை அனைவரும் வரவேற்கின்றனர்.

அதைவிடுத்து நிதி ஆதாரம் ஏதுமில்லாமல் சட்டமன்றத்தில் அறிவித்த அறிவிப்புகளை தமது அரசின் ஈராண்டு சாதனையாக புதுச்சேரி அரசு வெளியிட்டிருப்பது அரசின் செயலற்ற தன்மைக்கே சாட்சியாக உள்ளது. நிதி ஒதுக்கீடே இல்லாத திட்டங்களை எல்லாம் முன்னிலைப்படுத்தி இருக்கிறார். மாதம்தோறும் சிலிண்டருக்கு ரூ.300 மானியம் என முதல் அமைச்சர் அறிவித்தார். அதற்கு எங்கே நிதி.? வேலை வாய்ப்புக்கு தொழில்நுட்ப பூங்கா எங்கே.? காணவில்லை. 6 முதல் 12ம் வகுப்பு வரை சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் எங்கே.?. காங்கிரஸ் - தி.மு.க. ஆட்சியில் வேலை விழந்தவர்களுக்கு வேலை என்றார். எத்தனை பேருக்கு வேலை கொடுத்தார்.?

உலக தமிழ் மாநாடு எப்போது? தமிழ் மொழிக்கான மொழியியல் பண்பாட்டு நிறுவனம் இன்று மூடுவிழா கண்டுள்ளது. ஏழை மகளிருக்கு அறிவித்த மாத தொகை முதல் மாதம் வழங்கியதோடு காலாவதியானது. புதிய சட்டமன்றம், மேம்பாலம் எங்கே.? அரசின் பழைய கடன் தள்ளுபடியானதா.? நிதிக்குழுவில் புதுவை அரசு இணைக்கப்பட்டதா.? ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் தொடருமா.? 10 ஆயிரம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப் பட்டதா.? கூட்டுறவு நிறுவனங்கள் புனரமைக்க ப் பட்டதா.? எதையும் இந்த அரசு செய்யவில்லை.

ஆனால் உண்மையான சாதனைகளை பட்டியலில் சேர்க்காமல் இந்த அரசு மறந்துவிட்டது. அதை நினைவு படுத்துகிறோம். வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி ரெஸ்டோ பார்கள், இந்தியாவிலேயே பெண்களுக்கு என்று தனி மது பார், இளைஞர்களும், மாணவர்களும் போதையில் மூழ்கியிருக்க புதுச்சேரியில் கஞ்சா விற்பனை, புதிதாக 6 மதுபான தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கு அனுமதி, லாபத்தில் இயங்கிய மின்துறையை தனியாருக்கு விற்பனை, காரைக்கால் துறைமுகம் அதானிக்கு தாரைவார்த்தல், கூட்டுறவு சர்க்கரை நூற்பாலை தனியாருக்கு ஏலம், மாணவர்களுக்கு உப்பு சப்பு இல்லாத அட்சய பாத்திரா மதிய உணவு, 100 நாள் வேலைத்திட்டம் 5 நாள் வேலையாக சுருங்கியது, ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் சாப்பாடு இல்லாத அவல நிலை, சிறப்புக்கூறு நிதி ரூ. 166 கோடி செலவு செய்யாமை, இவற்றை எல்லாம் சாதனை பட்டியலில் சேர்க்காதது ஏன்.?

புதுச்சேரி மக்கள் என்றைக்கும் விழிப்பான வர்கள். அவர்களை ஏமாற்றும் வகை விடுத்து மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள், அறிவித்த திட்டங்களை செயல்படுத்த புதுச்சேரி அரசு ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். அறிவிக்கப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தும் போது அதனை நாங்கள் வரவேற்க தயங்க மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில்

# நாமக்கல் இந்திரா நகரில் பகுதிநேர நியாய விலை கடை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல், மே 10 -

நாமக்கல் ஒன்றியம் இந்திரா நகர் பகுதியில் 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் பொன்விழா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் நியாய விலை கடையில் பொருட்களை வாங்கி வந்தனர். இந்திரா நகர் பகுதியில் 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இருப்பதால் இப்பகுதியில் தனியாக நியாய விலை கடை அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கல்கி மகளிர் சுய உதவி குழு மூலம் பகுதி நேர நியாய விலைக் கடை நடத்துவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனுமதி அளிக்கப் பட்டது.

அதன் அடிப்படையில் இந்திரா நகர் பகுதியில் கல்கி மகளிர் குழு மூலம் நடத்தப்படும் பகுதி நேர நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் ரமேஷ், மகளிர் திட்ட அலுவலர் பிரியா, நாமக்கல் ஒன்றிய கழக செயலாளர் வி.கே. பழனிவேல் ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு நியாய விலை கடையைத் திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்து பேசினார். அப்போது, நாமக்கல் மாவட்டத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் நடத்தப்படும் 2 வது கடையாக கடை செயல்பட உள்ளது. இந்த கடையில் 185 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப் பட உள்ளது. பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் கடந்த 2 ஆண்டுகளாக, குறிப்பாக தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பின் தரமான பொருட்கள் விநியோ கிக்கப்பட்டு வருகிறது. மக்களின் மனதை அறிந்து அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்து கொடுக்கும் அரசாக திகழ்ந்து வருகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி, வட்ட வழங்கல் அலுவலர் சின்ன த் தம்பி, கூட்டுறவு சார்பதிவாளர் சுரேஷ், நாமக்கல் ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம்பரிதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கிருபாகரன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மகேஷ், நகர இளைஞரணி சதீஷ், வினோத் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் பார்த்தசாரதி, முத்தையான், அகிலாண்டேஸ்வரி மௌலானா, புஷ்பராஜ், செந்தில், அன்பு, சக்திவேல், பிரஷாந்த், ஆனந்த குமார், செந்தில் குமார், கண்ணன், மகளிர் அணி அகிலா மற்றும் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை நாமக்கல் ஒன்றிய திமுக பொருளாளர் ச.கணேசன் செய்திருந்தார்.

# திருமுக்கூடலில் தார் சாலை அமைக்கும் பணி!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

காஞ்சிபுரம், மே 10 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், திருமுக்கூடல் புல்லம்பாக்கம் வயலக்காவூர் இடைய 4 கோடியே 45 லட்சம் மதிப்பில் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

இதில் க. செல்வம் எம்.பி. சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் தி.குமார், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், மஞ்சுளா திருமுக் கூடல் அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, துணைச் செயலாளர் ஞான சேகரன், மாவட்ட கவுன்சிலர் கோ.சிவராமன், பாபு, மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கலந்து கொண்ட னர்.

# அரியலூர் நகரத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரை!

அரியலூர்,மே 10 -

அரியலூர் மாவட்டம் அரியலூர் நகர கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா சிலை அருகே திராவிட மாடல் அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு நகரச் செயலாளர் இரா.முருகேசன் தலைமை வகித்தார். நகர அவைத் தலைவர் மாலா.தமிழரசன் வரவேற்றார். கூட்டத்தில் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பங்கேற்று பேசியதாவது:-

தமிழக பொதுமக்களின் திட்டங்களை மிகசிறப்பாக செயல்படுத்தி வருவதாக பிற மாநில முதல்வர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டி வருகின்றனர்.

தமிழக அரசின் திட்டங்களில் ஒன்றான மகளிருக்கு கட்டணம் இல்லாத பேருந்து பயணத்திட்டம், இந்தியாவில் பேசப்படும் திட்டமாக உள்ளது. தமிழகத்தில் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மகளிருக்கான பேருந்து பயணத்திட்டத்தை கர்நாடகவில் தேர்தல் வாக்குறுதியாக அறிவிக்கப் பட்டுள்ளது. கொரோனா நிதி, மகளிர் கட்டணம் இல்லாத பயணத்திட்டம் தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்பட்ட திட்டம். ஆனால், புதுமைப் பெண் திட்டம் தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்படாத திட்டம். இத்திட்டத்தால் கிராமப்புற மாணவிகள் உயர்கல்வி பெற வழிவகை செய்துள்ளது. பெண் கல்வி வளர்ந்தால், நாடு வளர்ச்சி அடையும் என்பதே முதல்வரின் திட்டமாகும்.

மாணவர்களுக்கு திறன் வளர்க்கும் விதமாக நான் முதல்வன் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக்கொண்டு பணிக்குச் செல்ல ஏதுவாக அமையும். தமிழகத்தில் நடைபெற்று வரும் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியை இந்தியாவே திரும்பி பார்க்கிறது. தற்போது, வெளிநாட்டிலிருந்து பல்வேறு தொழில் நிறுவனங்களை கொண்டுவர ஏற்பாடு செய்து வருகிறார்.

**எடப்பாடி நிரூபிக்க வேண்டும்!**

தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு எந்த கிராமத்துக்காகவது பேருந்து செல்வது நிறுத்தப்பட்டிருந்தால் அதை எடப்பாடி பழனிசாமி நிரூபிக்க வேண்டும்.

என்னுடன் வாருங்கள் நீங்கள் சொல்லும் எந்த கிராமத்துக்கு வேண்டுமானாலும் சென்று, பொதுமக்களிடம் பேருந்து வருகிறதா? இல்லையா என கேட்போம் என்றார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் மா.அன்பழகன், வா.சௌந்தரராஜன்,

நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், நகர் மன்றத் துணைத் தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் தங்கை. எழில்மாறன்,

நகர அவைத்தலைவர் மாலா தமிழரசன், நகர பொருளாளர்

மா.இராஜேந்திரன், நகர துணை செயலாளர்கள் கோ.உத்திராபதி, செல்வராணி சுரேந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் கே.எம். சண்முகம்,நா.ஜெயகுமார், க.ராமு, க.கருணாநிதி, நகர்மன்ற உறுப்பினர்கள், மேரி லீனஸ், செல்வராணி பரமேஷ்வரன், ஆர்த்தி சத்தியன்,கண்ணன், ரேவதி ராமு, ஜெயந்தி குணா, ராணி , சந்திரசேகரன்,அன்பு ராஜேஷ், மு.க.புகழேந்தி, கழக நிர்வாகிகள், குணா, ராமு,குமார், அருண்ராஜா, முருகானந்தம், பொதுமக்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இறுதியாக நகர துணைச் செயலாளர் சி.விஜயகுமார் நன்றி கூறினார்.




நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் கிழக்கு நகரம் சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் நாமக்கல் நகர பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. இதில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு நகர செயலாளர் செ. பூபதி, மேற்கு நகர செயலாளர் சிவக்குமார், நகர மன்ற தலைவர் து.கலாநிதி டாக்டர் மாயவன் மற்றும் நகர கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பண்ணப்பட்டி ஊராட்சியில் அ.தி.மு.க., பி.ஜே.பி., தே.மு.தி.க.வைச் சேர்ந்த 110 அக்கட்சிகளை விட்டு விலகி, சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க. வில் இணைந்தனர். அவர்களுக்கு மாவட்டக் கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் கைத்தறி ஆடை அணிவித்தார். உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர். குபேந்திரன், மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.சி.ரவிச்சந்திரன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.சி.அறிவழகன், கிளைச் செயலாளர் குணேசேகரன் மற்றும் கிருஷ்ணன், பி.கே.என்.மணி, ரமணி, சங்கர், தட்சிணாமூர்த்தி ஆகியோர் இருந்தனர்.




சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், அப்பம்மசமுத்திரம் ஊராட்சியில் திராவிட மாடல் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஆத்தூர் ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில் நடைபெற்றது. கீரிப்பட்டி பேரூர் செயலாளர் காங்கமுத்து வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி திராவிட மாடல் இரண்டு ஆண்டு சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள், ஒன்றிய துணைச் செயலாளர் சசிகுமார், சிதம்பரம், தமிழ்ச்செல்வி, தங்கராஜ், மாவட்டப் பிரதிநிதி வரதராஜன், சிவசக்தி, பேரூர் கழக நிர்வாகிகள் ராமகோவிந்தன், ஆதிமூலம், சிங்காரம், ராமன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளரும் அரசு வழக்கறிஞருமான சந்திரசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராமன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார், துணை அமைப்பாளர்கள் சத்யராஜ், பார்த்திபன், மணிமாறன், கீரிப்பட்டி அமைப்பாளர் சதீஷ்குமார், தகவல் தொழில் நுட்ப அணி வெங்கடேசன், சக்திவேல், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சேகர், அய்யா கண்ணு, பரமேஸ்வரி வீராசாமி, லிங்கம்மாள் , ஊராட்சி தலைவர் கனிமொழி ஜோதி,பேரூராட்சி கவுன்சிலர்கள் காளியம்மாள் கணேசன், கனகராஜ், சுரேஷ் மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருத்துறைப்பூண்டி நகரக் கழகம் சார்பில் நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தி.மு.க. அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை.அசோகன் பேசினார். நகரச் செயலாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆர்.எஸ்.பாண்டியன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ஆடலரசன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், கழக நிர்வாகிகள் அண்ணாதாசன், ஆர்.எஸ்.சுந்தர், சிக்கந்தர், வி.சிதம்பரம், வசந்த், கமல் மற்றும் ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.